Srilanka. Under No.KJV 59/87

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM இதழ்

பக்கங்கள் -06 விலை 5/=

தீபம் -58 மே 2004 ஒளி -80

**சிந்தனைச் சுடர்**

"ஒவ்வொருவரும் தமக்காகவும் பிறருக்காகவும் தமது திறன்களையும் சாதனங்களையும் தம்முடைய நிர்வாகத்தின் கீழ்கொண்டு வந்து அதனால் ஏற்படும் இலாபமோ நட்டமோ எதுவானாலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளும் முறை தான் கூட்டுறவு."

-ஹொரிக்.

# நட்டத்தில் இயங்கும் சங்கங்களின் செயற்பாடுகளில் அங்கத்தவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி ஆலோசனை

கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு மூலதனம் என்பது உயிர் போன்றது. இந்தப்பங்கு மூலதனம் இல்லாவிட்டால் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிப்பதோ அல்லது வியாபார நடவடிக்கைகளைக் கொண்டு நடத்துவதோ முடியாத காரியமாகும். இதனாலேயே கூட்டுறவுச்சங்கங்களின் அங்கத்தவர்கள் பங்குதாரர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இந்தப்பங்கு மூலதனம் ஒன்று தான் கூட்டுறவுச சங்கங்களில் அங்கத்துவ அக்கறையை உருவாக்குகின்றது.

பண்டத்தரிப்பு பரிஷ் பல.நோ.கூ.சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே கூ.அ.உ.ஆணையாளர் செ.க்னகசபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்று இம்மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்களை எடுத்துப் பார்த்தால் அநேகமாக மொத்தப்பங்கு மூலதனத்தைவிட சராசரி பத்துமடங்களவுக்கு தேறிய நட்டத்தை ஐந்தொகைகளில் காணக்காக கூடியதாகவுள்ளது. பாரிய அளவு தொகை ஒன்று இவ்வாறு தேறிய நட்டமாக இருப்பது அங்கத்தவர்கள் அடைந்துள்ள இழப்பு ஒன்றைத்தான் சுட்டி நிற்கினறது. பொதுவாக அங்கத்தவர்கள் தமது பங்குகளை இழந்து விட்டனர் என்பதையே இந்த நிலைமை காட்டுகின்றது. பொதுவாக இழப்பு நடவடிக்கை ஒன்றின்போது இறுதியாகச் செலுத்தப்படுவது பங்குப் பணமேயாகும். அதாவது அங்கத்தவர்கள் தமது சங்கத்தில் நட்டம் என்ற ரீதியில் எதையாவது இழக்கின்றார்கள் என்றால் அவர்கள் முதலில் இழப்பது பங்கு பணமாகவே இதன்படி இருக்கும். சில அங்கத்தவர்களின் ஐந்தொகையைப் பார்க்குமடத்து பங்குப்பணத் தொகை முழுதாகவே நட்டத்தினால் அழிக்கப்பட்டிருக்கும். இவ்வாறான நிலையில் அங்கு அச் சங்கத்தில் அங்கத்தவர்களது உரிமையென எதனைச் சொல்ல முடியும். பங்குப்பணம் இழக்கப்படும் போது ஏணைய தங்கள் உரிமைகளுமே அற்றுப்போகின்றன எனலாம்.

ஏனவே அங்கத்தவர்கள் தமது சங்கங்களில் நட்டமேற்படாது பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும். நட்டத்துக்கான காரணங்களை அவ்வப்போது அராய்ந்து திருத்த நடவடிக்கைகளை எடுத்து இலாப மீட்டும் நிலையில் சங்கங்களை வைத்திருத்தல் வேண்டும். இலாப மீட்டும் நிலையிலில்லாத சங்கம் ஒரு நோயாளிக்குச் சமமாகும்.



நோயாளி ஒருவர் எவ்வாறு கண்ணும் கருத்துமாகப் பராமரிக்கப்பட வேண்டியவரோ அவ்வாறே இவ்வாறான நட்டத்திலியங்கும் சங்கங்களும் தொடர்ச்சியான அங்கத்தவர்களது கவனிப்புக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

பொதுக்கூட்டம் ஒன்றில்தான் அல்லது பொதுக்கூட்டத்திலன்றுதான் எல்லாவிடயங்களையும் கதைக்க வேண்டும். அல்லது பின்பு கதைக்கலாம் என்ற எண்ணத்துடன் அங்கத்தவர்கள் செயற்படக்கூடாது. குறிப்பாக பொதுக்கூட்டம் ஒன்றை குறித்து ஒரு நேரத்துக்குள் முடிவுக்குக் கொண்டு வரக்கூடியவிதத்தில் அங்கத்தவர்கள் பொதுக் கூட்டத்திற்கு வரும்போது நிகழ்ச்சி நிரலிலுள்ள பல்வேறு விடயங்களையிட்டும் தம்மைத் தயார் படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். அதாவது பொதுக்கூட்டத்துக்கு வெளியிலும, பொதுகூட்டம் அல்லாத ஏனைய நாட்களிலும் அங்கத்தவர்கள் சங்க நடவடிக்கைகளையிட்டு அக்கறையுடன் செயற்படல் வேண்டும்.

சமூகத்தில் கூட்டுறவு அமைப்புகள் இன்று தவிர்க்கப்பட முடியாதவையாகிவிட்டன. எனினும் இம்மாவட்டத்திலுள்ள சங்கங்களில் பல செயற்பாடு மூலதனமின்றியும், திரவச் சொத்துக்கள்...

(06ஆம் பக்கம் பார்க்க...)

## பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களை மீள அமைப்பதற்கு கூ.சபை நடவடிக்கை


தற்பொழுது செயற்படாதுள்ள பாடசாலை கூட்டுறவு சங்கங்களை மீளவும் இயங்க செய்வதற்கும் புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது சம்பந்தமாக யாழ் மாவட்ட கூட்டுறவுசபை சகல கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஒவ்வொரு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பினுள்ளேயும், ஒவ்வொரு பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பினுள்ளேயும் குறைந்தது ஒவ்வொரு பாடசாலை கூட்டுறவுச் சங்கத்தினை ஆயினும் நிறுவுவதற்கு சங்க கல்வி உத்தியோகத்தர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இப்பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல் தொடர்பாக, யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை உத்தியோகத்தர்களும், சங்கக் கல்வி உத்தியோகத்தர்களுடன் இணைந்து வேலைத் திட்டத்தினை தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, சபை உத்தியோகத்தர்களது ஒத்துழைப்பு தேவைப்படுமிடத்து எமக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று அவர் கூறியிருந்தார்.



யாழ்.மாவட்ட கூட்டுறவுசபையினால் நடத்தப்படும் கணனிப் பயிற்சி நெறியின் நாலாவது தொகுதி மாணவர்களின் பிரியாவிடை வைபவத்தில் கூ.சபைத் தலைவர் பெ.கனகசபாபதி உரையாற்றும்போது எடுக்கபபட்ட படம்.

## யாழ்.பல.நோ.கூ.சங்கம் யு.என்.டி.பி உதவியுடன் சுயதொழில் முயற்சிக் கடன் அறிமுகம்

எமது சங்க அங்கத்தவர்களின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துமுகமாக யு.என்.டி.பி நிறுவனம் வழங்கியுள்ள் நிதி உதவியுடன் சங்க நிதியையும் சேர்ந்த சுயதொழில் முயற்சிக் - கடன் வழங்கும் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்று யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் சூ.சிறில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நடுவப் பணிமனைக் கோட்போர் கூடத்தில் நடைபெற்ற யு.என்.டி.பியின் சுழற்சி முறைக் கடன் தொடர்பான கருத்தரங்கிற்குக் தலைமை வகித்துப் பேசும் போதே சங்கத்திலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கிற்கு கடன் பெறும் பயனாளிகள் கிளைக் குழு தலைவர்கள் செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(06ஆம் பக்கம் பார்க்க...)

## மகளிர் பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையின் மாவட்ட மகளிர் குழுவினால் மகளிர் கல்வித் திட்டத்தின் கீழ் சங்க மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப் பயற்சி நெறிகளில் சுமார் 150 இளம் பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி, மத்தி மகளிர் சி.க.கூ.சங்கம், சாகவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றிலும், மாவட்ட மட்டத்தில் மனையியல் டிப்புளோமா உட்பட பல பயிற்சிகளை யாழ் மாவட்ட கூட்டுறவுச் சயையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் கணனிப் பயிற்சி பெற முன் வரவேண்டும்

நவீன தொழிற்நுட்ப முறைகளுக்கேற்ப கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது செயற்பாடுகளை கூடியளவு கணனி மயப் படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில் சங்கப் பணியாளர்கள் கணனியில் பயிற்சி பெறுவதற்கு முன் வரவேண்டுமென கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனசகபாபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் கணனிப் பயிற்சி பெற்ற நான்காவது தொகுதி மாணவர்களின் பிரிவு உபசார விழாவிலேயே இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கூட்டுறவுச் சங்கங்களுக்கு யு.என்.டி.பி நிறவனம் கணனிகளை வழங்கியும் குறிப்பிட்ட பணியாளர்களுக்கு பயிற்சயும் வழங்கிவந்துள்ளது. இந்நிலையில் இவர்களது ஆற்றலை மேலும் வளர்ப்பதற்காக யாழ். மாவட்ட கூட்டுறவுசபை இத்தகைய பயிற்சி நெறியை வழங்கி வருகிறது என்றும் கூறினார்.

இவ்வைபவத்தில் கூட்டுறவுச் சபையின் முன்னாள் செயலாளர் முன்னாள் சு.சிவசுப்பிரமணியம், தங்போதைய செயலாளர் பொ.சண் முகசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம்

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் 1972 ஆம் ஆண்டு 12ஆம் இலக்க கூட்டுறவு ஆணைக்குழுச் சட்டத்தின் படியும் இச்சட்டத்திற்கான 1992ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரகாரமும் ஒழுகுதல்வேண்டும். இச்சட்டத்தின்படி மூன்றுபேரைக் கொண்ட ஆணைக்குழு அமைச்சரால் நியமிக்கப்படும். இவர்களுள் ஒருவர் அமைச்சரால் தலைவராக நியமனம் பெறுவதுடன் இக்குழு மூன்று ஆண்டுகளுக்குச் செயற்பட முடியும்.

சங்கப் பணியாளரோ, தொழிற்சங்கவாதிகளோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ, கூட்டுறவுச்சங்க நிர்வாகிகளோ இக்குழுவில் அங்கத்தவர்களாக இருக்கமுடியாது.

இவ்வாணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையிலுள்ள ஒருவரே பதவி வகக்கவேண்டும்.

இவ்வாணைக்குழுவில் பணிபுரியும் பணியாளர்கள் அரசாங்கத்தின் மாறறம் பெறும் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படுவர்.

### இந்த ஆணைக்குழுவுக்கு பின்வரும் அதிகாரங்கள் இருக்கும்

* பணியாளர்களை வேலைக்கமர்த்தல், வேலை கொள்ளும் முறை, விடுதலை, பதவி உயர்வு என்பவற்றுக்கான ஒழுங்குகளை ஏற்பாடு செய்தல்.

* பதவிக்குத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை, பரீட்சை நடத்துவதற்கான குழுக்கள், பரீட்சைக் கட்டணங்களை அறவிடல் ஆகிய ஏற்பாடுகள்.

* பதவிக்கான தகுதிகளையும், சம்பளங்களையும், பதவி நிலைகளையும் கூட்டுறவு ஆணையாளரின் ஆலோசனையுடன் நிர்ணயஞ்செய்தல்.

* ஒரு ஊழியருக்கு எதிரான நடவடிக்கைகளின் பொருட்டு சங்கங்கள் கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகளை ஆக்குதல்.

* பணியாளர்கள் தொடர்பிலான ஆவணங்களை ஒழுங்கு முறையாகப் பேணும்படி சங்கங்களை வலியுறுத்தலும், அவற்றை வேண்டியபோது கோருதலும்.

* விசாரணைக்குழுக்களை நியமித்தல், தீர்ப்புக்கள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்.

* பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய பணிக்கொடை ஏற்பாடுகளைத் தீர்மானித்தல்.

* கூட்டுறவு ஊழியர்களுக்குப் பொருத்தமான ஏனைய வழிமுறைகளைக் காலாகாலம் ஆக்குவதற்கான ,அதிகாரத்தைக் கொண்டிருத்தல்.

* பணியாளர்கள் பணிபுரியும் ஒவ்வொரு சங்கமும் இச்சட்டத்தின்கீழ் வேலை கொள்வோராவர். இதன்படி சங்கமும், பணியாளர்களும் இவ்வாணைக்குழு விதிக்கும் நடைமுறைகளை ஏற்று நடத்தல் வேண்டும்.

* ஒரு பணியாளரின் வதிவிடத்தை அடிப்படையாகக் கொண்டு நியமனஞ் செய்தலையும் வேண்டிய இடத்து வேறு மாவட்டங்களில் இருந்து ஒரு பணியாளரை நியமனம் செய்தலையும் உரிய ஒழுங்கு விதிகளின்படி மாற்றங்கள் இடம்பெறுதலையும் ஏற்பாடு செய்தல்.

* தேவையேற்படும் போது அரசாங்க ஊழியர் ஒருவரை சங்கத் தேவையின் பொருட்டு விடுவிக்கும்படிக் கோரவும், விடுவிக்கவும் ஏற்பாடு செய்தல்.

* பணியாளர் செலுத்தவேண்டிய பிணைகளைத் தீர்மானித்தலும் அந்நிதிகளைக் கண்காணிக்கவும் வேண்டிய ஏற்பாடுகள்.

* ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சட்ட ரீதியான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதை வலியுறுத்தல்.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் நியமனம் செய்யக்கூடிய பணியாளர்களை அங்கீகரிக்கும் பொறுப்பு இச் சட்டப்படி கூட்டுறவு ஆணையாளருக்கே உரியதாகும்.

1992ஆம் ஆண்டு 51ஆவது திருத்தச் சட்டத்தின்படி கூட்டுறவு வேலையாளா ஆணைக்குழுவின் கீழ் விசாரணையிலுள்ள பிணக்கொன்றை இது தொடர்பிலான ஊழியரோ, சங்கமோ தொழிற்பிணக்கு நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லல் ஆகாது. அவ்வாறே ஒரு ஊழியர் தனது பிணக்கொனறை தொழில் நீதிமன்றம்மூலம் தீர்க்க விரும்பின் அவ்வாறு செய்யமுடியுமென்பதுடன் அத்தகைய ஒரு பிணக்கொன்றை மீண்டும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவுக்குப் பாரப்படுத்தலாகாது.

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சட்டத்தில் அல்லது பிரமாணங்களில் கூறப்படாத ஒரு விடயம் சம்பந்தமாக மேலதிக விபரங்களை கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு பிரஸ்தாபிக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சாதாரண தொழிற்சட்ட நியதிகள் வலுவுள்ளதாகும்.



யாழ்.மாவட்ட கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் 2003/2004 ஆண்டு கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்பிரிவு மாணவர்களின் பிரிவுபசார வைபவத்தின் போது இடம்பெற்ற மரம் நடுகை விழாவில் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, முன்னாள் செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் மரங்களை நாட்டுவதையும், மாணவர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கிளை நிர்வாகிகள் தெரிவு

யாழ்.மாவட்டத்தில உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுசசங்கங்களின் கிளை நிர்வாகிகளை தெரிவுசெய்யும் நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப.தெ.வ) சி.ஜயாத்துரை மேற்கொண்டுவருகிறார்.

மாதாந்த நிகழ்ச்சித் திட்ட அடிப்படையில் 08/05/2004 இல் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினதும்,15/05/2004 இல் தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினதும், 22/05/2004ல் சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினதும் கிளை நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றுள்ளன.

இதனடிப்படையில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள கிளை நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளன. சங்கங்களின் பெயா விபரம் வருமாறு,

05/06/2004 - கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

12/06/2004 - மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

19/06/2004- கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

26/06/2004- அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## பரிசூதிய திட்ட 12ஆவது குலுக்கலில் பரிசு பெற்றோர் விபரம்

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திவரும் நிலையான வைப்புச் சான்றிதழ பரிசூதியத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் 12ஆவது குலுக்களின்போது அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு.

1ஆம் பரிசு க.கௌரி (நல்லூர் ப.நோ.கூ.சங்க ஊழியர் சி.க.கூ.சங்கம்) 5000ரூபாய்

2ஆம் பரிசு பா.அகிலாண்டநாயகி (பன்னாலை மகளிர் சி.க.கூ.சங்கம்)3000ரூபாய்

3ஆம் பரிசு சி.பவநீதா (மந்திகை மகளிர் சி.க.கூ.சங்கம்) 2000ரூபாய்

தலா 500ரூபா ஆறுதற் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு,

ஞா.பகீரதி, அச்சுவேலி ஸ்ரீமுருகன் சி.க.கூ.சங்கம். க.கலைவாணி, உலோலசிட்டி விநாயகர் சி.க.கூ.சங்கம். அ.ஆன்சாமினி ,பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ.சங்கம். க.வசந்தாதேவி, நவாலி முருகானந்த மகளிர் சி.க.கூ.சங்கம். மோ.அஜிந்தன், தென்கோவையூர் உதய சி.க.கூ.சங்கம். ம.மகாரூபன், நல்லூர் ப.நோ.கூ.ச.ஊ.சி.க.கூ. சங்கம். ஐ.பவளமணி, நல்லூர் ப.நோ.கூ.ச.ஊ.சி.க.கூ.சங்கம். எஸ்.மகேஸ்வரி, பத்தைமேனி பெண்கள் சி.க.கூ.சங்கம். ப.தவமணிதேவி, இலந்தைச்சாலை மாதர் சி.க.கூ.சங்கம். பொ.கமலாதேவி, ஆயக்கடவை சித்தி விநாயகர் சி.க.கூ.சங்கம். தி.கவிதா, கோண்டாவில் வடக்கு கலைவாணி சி.க.கூ.சங்கம். பொ.சிவஞானசுந்தரம், பண்ட.பரிஸ்ப. ப.நோ.கூ.ச.ஊ.சி.க.கூ.சங்கம். பொ.கந்தசாமி, பண்ட.பரிஸ்ப நோ.க.ச.ஊ.சி.க.கூ.சங்கம். அ.கோபினிகிருஷ்ணா, வட்டு.சிவன சி.க.கூ.சங்கம். வி.நகுலேஸ்வரி, நவாலி முருகானந்தா மகளிர் சி.க.கூ.சங்கம். ஜெ.நவமலர், உடுப்பிட்டி மத்தி மகளிர் சி.க.கூ. சங்கம். க.தேனுஜா, சிறுப்பிட்டி மேற்கு சி.க.கூ.சங்கம்.

## ஜூன் மாத பயிற்சி வகுப்புக்கள்

2004 ஜூன் மாதத்தில் யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபையினால் நடத்தப்படவுள்ள சங்க பயிற்சி வகுப்புக்கள் விப்ரம் வருமாறு.

- 06.06.2004 - கோப்பாய் பிரதேச சி.க.கூ. உறுப்பினர் பயிற்சி
- 05.06.2004 - அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ. சங்க மகளிர் உறுப்பினர். பயிற்சி
- 14.06.2004 - பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.ச. மகளிர் உறுப்பினர் பயிற்சி
- 12.06.2004 - ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச மகளிர் உறுப்பினர் பயிற்சி
- 16.06.2004 - பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்கம் பொதுச்சபை உறுப்பினர் பயிற்சி வகுப்பு

19,20/06.2004 - பனை தென்னைவள அபிவிருத்தி கூ.சங்கங்களின கிராமிய வங்கிப் பணியாளர் பயிற்சி வகுப்பு மாவட்ட மட்டம்.

### மேற்படி பயிற்சி நெறிகளுடன்

கைதடி ப.நோ.கூ.சங்கம் பாடசாலை விரிவுரையும் சங்கானைப் பிராந்திய சி.க.கூ. உறுப்பினர் பயிற்சியும் சண்டிலிப்பாய் பிராந்திய சி.க.கூ. உறுப்பினர் பயிற்சியும் ப.நோ.கூ.சங்கங்களின் கிராமிய வங்கி பணிப்பாளர்களுக்கான பயிற்சி நெறிகளும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புதிய கூ.அ.உ. ஆணையாளர் நியமனம்

யாழ்ப்பாணம் (பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின்) கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக சி.ஜயாத்துரை வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக (ப.தெ.வ) கடமையாற்றிய சு.கணேசமூர்த்தி இளைப்பாறிச் சென்றமையை அடுத்தே சி.ஜயாத்துரை உதவி ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ஒன்று சேர்தல், உலகததைத் தழுவுந் தன்மை, குடியாட்சி நெறிமுறைமை, சுயேச்சை, வினைத்திறன், உத்தரவாதம், பிரசாரம் (கல்வி) ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும் இயக்கமே கூட்டுறவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத அர்த்தங்கள் - 12

## தொடர் நாவல்

### கே.எஸ்.ஆனந்தன்

> வாழ்க்கையில் உனக்குக் கிடைக்கும் இன்ப துன்பங்கள், சுக துக்கங்கள் யாவும் உன்னுடைய சொந்த கர்மங்களின் பிரதிபலன்தான் - வேறில்லை.
>
> -ஸ்ரீமத் பாகவத ரகசியம்.

மனிதன் பிறக்கும்போது நல்லவனாகத்தான் பிறக்கின்றான். அவன் வளரும், வாழும் சூழல்தான் அவனை நல்லவனாகவும் - கெட்டவனாகவும் மாற்றியமைத்துவிடுகின்றது. இதைத்தான் விதி என்கிறார்கள்போலும். நல்லவர்களாயிருந்து இடையில் குணம் மாறுபவர் சிலர் உண்டு. அவர்களிடம் இடையில் வந்துசேரும் செல்வச் செருக்கினால் ஏற்படும் ஆண்வமே அதுவாகவிருக்கலாம். அப்படியான ஒருவளாகவே சரஸ்வதியும் விளங்கினாள்.

இதிகாசங்கள், புராணங்கள் படித்தவர்கள், படிக்கக் கேட்டவர்கள் கூட இந்த ஆணவச் செருக்கினால் அல்லல் பட்டவர்கள் பற்றியும், அழிந்து ஒழிந்தவர்கள் பற்றியும் அறிந்திருந்தும் ஏனோ பின்பும் அந்த மாயவலையில் வீழ்ந்து விடுகின்றனர். இதுவும் புரியாத ஓர் புதிராகத்தானிருக்கின்றது.

கிருஸ்ணகாந்தன் கூறியவற்றைக் கேட்ட சரஸ்வதி ‘அது தானே கேட்டனான்’ என்று கூறிவிட்டுச் சென்றதை நினைத்து தனக்குள்தானே சிரித்துக் கொண்டான் கிருஸ்ணகாந்.

அறியாமை இருளில் உழல்கின்றாளா? அல்லது ஆணவச் செருக்கினால் நல்லதைக் கூட தனக்குச் சாதகமான வழியில் நினைத்து இன்புறுகின்றாளா? என்று புரியாதவனாக மோட்டார்பைக்கை இயக்கிக் கொண்டு புறப்பட்டான். போகும் பாதையை விழிகள் பார்த்துக் கொண்டபோதும் அவனது சிந்தனை சரஸ்வதியைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தது.


அவனுடைய பெற்றோரிடம் சௌந்தர்யா பற்றி இல்லாத பொல்லாத கதைகளை அவள் கூறியிருந்தாளாயினும் அவற்றை அவர்கள் பொருட்படுத்தவில்லை. மகன் சௌந்தர்யா பற்றி நன்கு அறிந்துவந்து கூறியதைக்கொண்டு அவன் விருப்பப்படியே சிவலிங்கம் வாத்தியார் வீடு சென்று திருமணம் பேசி முற்றாக்கியிருந்தனர். அந்த விடயத்தையே பெற்றோரின் விருப்பம் எதுவோ அதன்படியேதான் எதுவும் நடக்கும் என்று கூறியிருந்தான்.

சரஸ்வதி அதை தான் கூறியவற்றை அவன் பெற்றோர் நம்பிக்கொண்டதாகவும், திருமணம் நடக்காது என்றும் அர்த்தம் செய்துகொண்டுவிட்டாள். தன்னுடைய நோக்கம் நிறைவேறிவிட்டதாய் மனப்பால் குடித்தவளுக்கு கிருஸ்ணகாந்தனைப் பார்த்தநேரம் தொடக்கம் மனம் பற்றி எரிந்துகொண்டிருந்தது. அழகும், உத்தியோகமுமுள்ள ஓர் புருஷன் சௌந்தர்யாவுக்கு கிடைத்துவிட்டால்..? கிடைக்கக்கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டே கோயிலுக்குச் சென்றாள். அங்கே சென்றபோதும் மனம் அமைதி பெறவில்லை.

கணவன் ஆறுமுகத்தின் மனமாற்றம் அவளை மேலும் ஆவேசமடையச் செய்திருந்தது. எப்படியும் அந்தத் திருமணம் நடைபெறாது என்று நினைத்தாலும் மனம் நிம்மதியடையாது தவித்தது.

முருகப் பெருமானுக்கு மூலஸ்தானப் பூசை நடந்து பஞ்சாரத்தி காட்டிக்கொண்டிருந்தார் குருக்கள். ‘முருகா எப்படியாவது நீதான் அந்தச் கல்யாணத்தை நிறுத்தி சௌந்தர்யாவை அழவைக்கவேண்டும. என்னை அவமானப்படுத்தினவள் சந்தோஷமாக வாழக்கூடாது’ என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டு உட்பிரகாரத்துக்குள் சென்றாள்.

மூலஸ்தானப் பூசை முடிந்து பஞ்சபுராணம் பாடிக் கொண்டிருந்தார் ஓர் முதியவர். பஞ்சுபோல நரைத்துவிட்ட தலை முடியும், மீசை தாடியுமாகக்



காட்சியளித்த அந்த முதியவரின் முகத்தில் சாந்தம். பக்தர்கள் பிரகாரத்தில் அமர்ந்து அவர் பாடுவதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். பஞ்சபுராணம் பாடி முடிந்ததும் அமைதியாயிருந்த பக்தர்களைப் பார்த்து கரம்கூப்பி வணங்கினார்.

கோவில் குருக்கள் அந்த முதியவருக்கு பிரசாதம் வழங்கிக் கௌரவிக்க, அவர் அதனைப் பெற்றுக்கொண்ட பின் கூடியிருந்தவர்களைப் பார்த்துக் கூறலானார்.

‘‘உங்கள் அனைவர்க்கும் முருகப்பெருமான் அமைதியும், ஆனந்தமும் நிறைந்த வாழ்வைத் தந்தருள வேண்டுகின்றேன். வேண்டுவார் வேண்டுவதை தந்தருளும் எம்பிரான் ஒருவரம் கேட்டால் இருவரம் தருவான். ஆணவத்தால் அழிந்துபோகவிருந்த சூரபத்மனை ஆட்கொண்டு சேவலும் மயிலுமாகத் தன்னிடமே வைத்துக் கொண்டவனல்லவா முருகன்’’ என்று கூறியபோது சரஸ்வதியும் உட்கார்ந்து கேட்கலானாள்.

‘‘மனிதர்களாய்ப் பிறப்பதற்கே நாம் மாதவம் செய்திருக்கின்றோம் என்பதுதான் பொருள். நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாது போனாலும் பிறருக்குத் தீமை செய்யாதே. நன்றும் தீதும் பிறர் தருவதில்லை. நாம் செய்பவை நமக்கே திரும்பவரும். முருகனை வணங்கும் நாம் எல்லோரும் ஆணவம் என்ற அறியாமை இருளிலிருந்தும் விடுபட்டு அவனுடைய ஒளிவெள்ளமாகிய அருட்புனலில் மூழ்கி அன்புடனும், பண்புடனும், அறவாழ்வு வாழ்ந்து பேரின்பப் பெருவாழ்வை அடைவோமாக’’ என்று கூறி நிறுத்தினார்.

அவர் கூறியவற்றை சரஸ்வதியால் ஜீரணிக்கமுடியவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்குபோல் இருந்தது பெரியவரின் அறிவுரை. எல்லோரும் எழுந்து வெளியேவர ஆயத்தமானபோது அவள் மூலவர் இருக்கும் பக்கம் செல்வதற்காக நவக்கிரகம் வைத்திருந்த இடத்திற்கு மேற்புறமான பாதையில் காலைவைத்தாள். மாபிள் கற்கள் பதித்த நிலத்தில் எண்ணெய் படிந்திருந்ததைக் கவனிக்காமலே மறுகாலை எடுத்து வைத்ததுதான் தெரியும் வழுக்கிவிழும்போது ‘‘ஐயோ’’ என்றாள். அதன் பின்பு நடந்தவை அவளுக்குத் தெரியாது.

* * *

சாய்வு நாற்காலியில் படுத்திருந்தவாறே ஓர் நாவலில் மூழ்கியிருந்தாள் சௌந்தர்யா. பெண் எழுத்தாளர் ஒருவர் எழுதிய நாவல் என்பதால் சினேகிதி ஒருத்தியிடம் படித்துவிட்டுத் தருவதாக வாங்கி வந்திருந்தாள். குறிப்பிட்ட ஒரு பகுதியை மிக ரசனையுடன் படித்தவளின் முகத்தில் ஓர் மலர்ச்சி. முள்முருக்கம் பூப் போன்ற இதழ்களில் இனம்புரியாத ஓர் முறுவல். அந்தப் பக்கத்தின் மூலையை மடித்து விட்டுஎழுந்து பேப்பரும், பேனாவும் எடுத்துவந்து மடித்த பக்கத்தை விரித்துவைத்து எழுதலானாள். அவள் உள்ளத்துள் ஓர் நந்தவனம் தோன்றி மலர்கள் விரிந்து மணம்வீச ஆரம்பித்தது.

‘‘சௌந்தர்யா’’ வெளிவாசலில் குரல்கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள். எழுதிய பேப்பரை மடித்து நாட்குறிப்புப் புத்தகத்துள் வைத்துவிட்டு வாசலை நோக்கி வந்தாள்.

‘‘சௌந்தர்யா’’ மீண்டும் அதேகுரல்.

‘‘ஏய்! நளினி நீயா?’’ என்று கதவைத் திறந்தாள்.

தாய்மையின் பூரண பொலிவுடன் நிற்கும் நளினியைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த சௌந்தர்யா ‘‘வாவ்! நான் எதிர்பார்க்கவே இல்லை. ஏது இந்தப் பக்கம்?’’ என்று அவள் கரம்பற்றி உள்ளே அழைத்து வந்தாள்.

‘‘இன்றைக்கு கிளினிக் வந்தேன். இன்று உனக்கும் லீவுதானே. பார்த்துட்டுப் போகலாம் என்று வந்தேன்’’

‘‘நளினி, உன்னைப் பார்த்தது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்குத் தெரியுமா? அது சரி கோப்பிபோடவா? அல்லது குளிர்பானம் ஏதாவது தரட்டுமா?’’

‘‘நீ அன்போடு தரும் எதுவும் எனக்கு அமிர்தம்தான்’’ என்று சிரித்தாள் நளினி.

‘‘இதோ ஒருநிமிடம்’’ என்று கூறியவள் உள் அறைக்குச் சென்று குளிர்பானத்துடன் வந்தாள்.

‘‘ரீச்சர் குளிர்பானம் இருக்கட்டும். உட்காருங்கள் உங்களோட கதைத்து எத்தனை நாளாச்சு. எப்படி உங்கபாடு. மிஸ்டர் கிருஸ்ணகாந் கடிதம் ஏதாவது போட்டாரா? அல்லது சந்திச்சாரா?’’ என்று அவள் கரங்களைப்பற்றி இழுத்து தனக்கு அருகில் உட்காரவைத்தாள்.

சௌந்தர்யாவுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் சிரித்துக்கொண்டேயிருந்தாள்.

‘‘என்ன சிரிப்பு இது. சொல்லுங்கள் ரீச்சர்’’

‘‘நளினி, நீ அம்மா ஆகப்போகும் துணிவிலதானே என்னை இத்தனை கேள்விகளும் கேட்கிறாய். வீட்டிலிருந்து கடிதம் வந்தது. இருதரப்பும் சந்தித்து திருமணம் செய்வது என்று முடிவாகியிருப்பதாக. அவ்வளவோடு சரி. அவர் வரவும் இல்லை. கடிதம் போடவும் இல்லை. அப்படி வந்திருந்தால் உனக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்லப்போகின்றேன்’’ என்றாள்.

‘‘அப்படியா சங்கதி. வீட்டுக்காரரின் சம்மதம் கிடைச்சாலும், நாங்கள் எல்லாம் கூறினாலும் உன்னை நேரில் சந்தித்து உன் வாயால் சம்மதம் கேட்கவேண்டுமாம் அவர்’’ என்றாள் நளினி.

‘‘அப்படி அவர் சொன்னாரா?’’

‘‘ஆமாம்’’

‘‘உன் கணவரிடம்தான் கூறினாரா?’’

‘‘ம்’’

‘‘நான் சொல்லமாட்டேன். உனக்கே தெரியும் நளினி. நான் அநாவசியமாக எந்த விடயத்தையும் மனதில்போட்டுக் குழப்பாதவள். எந்தவித எதிர்பார்ப்புகளும் என்னிடம் கிடையாது. பெற்றோரின் விருப்பமே என் விருப்பம். எனக்கென்று தனி விருப்பம் எதுவும் கிடையாது. ஆனால் நளினி...’’ என்று நிறுத்தினாள்.

‘‘சொல்லு சொல்லு என்ன விடயம்?’’

‘‘உன்னிடம் சொல்வதற்கு நான் ஏன் பயப்படுகின்றேன். திருமணம் முற்றாகிவிட்டதாக அப்பா எழுதியிருந்தார். அந்தநாள் தொடக்கம் என் மனதில் ஓர் மாறுதல். எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாது இருந்த மனதில் அவர் நினைவு. இன்னும் என்னென்னவோ எல்லாம்...’’ என்று சிரித்தாள்.

(04ஆம் பக்கம் பார்க்க...)

## இலக்கியக் காட்சிகள்


### எதிர்பார்ப்பும் - ஏமாற்றமும்

நதிக்கரையில் செண்பகத் தோட்டம். அந்த நறுமலர்களின் வாசனை அவன் சிந்தனையை தொட்டுத் தாலாட்டியது. அடிவானில் முகிழ்த்த நிலவு மங்கை தன் தண்ணொளியால் வானவீதியை அணைத்துக்கொண்டிருந்தாள்.

வெண்ணிலவில் தோழியுடன் வருவதாய் பகர்ந்து சென்றவள் ஏன் இன்னும் வரவில்லை. நிலாவின் தண்ணொளியில் பார்க்குமிடமெல்லாம் அவளுடைய அழகுத் தோற்றம். வந்துவிட்டாள் என்று கனிவுடன் நெருங்கினால் ஏமாற்றம். இதயம் படபடத்துத் துடித்துக் கொண்டிருந்தது. நினைவு, இன்பம், துன்பம், ஏமாற்றம், சொல்லிச் சென்றவள் வரவில்லையே என்ற ஏக்கம். தலைசுற்றிட வேதனையையடைந்தான். அவள் வருவாள் என்ற நம்பிக்கையுடன் பார்த்திருந்தான். உலகம் மௌனத்துயிலில் ஆழ்ந்துவிட்டது. எவ்வித அரவமும் இல்லை. வானவெளியை வெண்ணிலா தழுவிக்கொண்டிருந்தது. இனி அவள் வரமாட்டாள் என்று உள்மனத்தில் ஓர் உறுத்தல்.

‘கண்ணம்மா வார்த்தை தவறி விட்டாய் என் மார்பு துடிக்குதடி’ என்று புலம்புகின்றான். பிரிவின் வேதனை அவனைத் துவளவைக்கிறது.

புதுமைக் கவிஞன், புரட்சிக் கவிஞன் பாரதியின் கற்பனையில் இப்படி ஓர் காதல் சோகம். இப்பாடலை படிக்கும் எம் முன் விரியும் காட்சியின்பத்தை நாமும் காண்போமா?



தீர்த்தக்கரையினிலே தெற்கு
மூலையில்
செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன்
வெண்ணிலவில்
பாங்கியோடென்று சொன்னாய்
வார்த்தை தவறிவிட்டாய் அடி
கண்ணம்மா
மார்பு துடிக்குதடி.

-பாரதியார்

பிறைசூடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்திரை நீரிழிவு நோய்

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிக மாவதால் நீரிழிவுநோய் ஏற் படுகிறது. இந்நோய் அதிகப் படியாக கண்களைத்தான பாதிகக்கிறது. இதுவே டய படிக ரெட்டினோபதி (Dia batic Retinopathy) எனப படும் இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை நல்ல பழக்க வழக்கங்களினாலும், நல்ல உணவு முறைகளினாலும் கட் டுப்பாட்டில் இருந்த இந்நோய் இப்போது ஆணகளை மட் டுமலலாமல் பெணகளையும் தாக்குகின்றது. இந்நிலை உரு வாகக் காரணம் முறையற்ற உணவுபழக்க வழககங்க ளும் போதுமான உடலுழை ப்பு இன்மையுமேயாகும்.

இந்நோய் பரம்பரையாக வர வாய்ப்புகள் உள்ளன. ஆகையால், தாய், தந்தை, உடன்பிறப்புக்களுக்கும் இந நோய் வர வாயப்புள்ளது. எனவே, 40 வயதிலிருந்து சர்க் கரையின் அளவை அறிதல நல்லது. இந்நோய்க்கு மும் முனையில் சிகிச்சை அளி க்கப்படுகிறது.

### கண் பாதிப்பு

சர்க்கரையின் அளவு அதிகமாவதால் உடலின் எல்லாப் பாகங்களும் பாதிக் கப்படுகின்றன. குறிப்பாக கண களில் பாதிப்பு அதிகமாக இருக்கும். இதனால் கண் இமை முதல் விழித்திரை வரை ஒவ்வொரு பகுதியும் மற்றும் நரம்புகளும் பாதிப் புக்கு உள்ளாகின்றன.

### ஒவ்வாமை

பொதுவாக சர்க்கரை அதிகமாக உள்ளவர்கள் அல



ர்ஜி எனப்படும் ஒவ்வாமைக்கு ஆளாகிறார்கள். இதனால் கண பிசுபிசுப்புத்தன்மை, அரிப்பு மற்றும் வீககம ஏறபடுகிறது. இதற்கு ஆண்டி அலர்ஜி மரு நதுகளைப் பயனபடுத்தி கட்டுப படுத்தலாம். இவையனைத்தும் மருத்துவரின் ஆலோசனையின் படி எடுத்துக்கொள்ளவேண்டும்.

### கண் கட்டி

சர்க்கரையின் அளவு அதிகமாவதால் கண் இமை யில் கட்டிவரும். 40 வயது க்கு மேற்பட்டவர்களுக்கு கண் கட்டி அடிக்கடி வந்தால் சர்க்கரை நோய் இருக்கிறதா என்பதை பரிசோதித்து அறி நதுகொள்ள வேண்டும்.

### பார்வையின் அளவு

அளவுக்கதிகமான சர்க்கரையினால் கண்பார் வையின் அளவு தாறுமாறாக மாறும். அதனால் மூக்குக் கண்ணாடி அடிக்கடி மாற்ற வேண்டியிருக்கும். இதனைத் தவிர்க்க சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள் ளுதல் வேண்டும்.

### கண்புரை

சர்க்கரையளவு அதிக மாகும்போது கட்ராக்ட் என னும் கண்புரை ஏற்படும். இந் தக் கண்புரையை நவீன முறையில் அறுவை சிகிச்சை செய்து மடித்து வைக்கக்கூடிய லென்சை பொருத்திக்கொள்ள வேண்டும்.

### விழித்திரை நீரிழிவு நோய்

சர்க்கரையின் பாதிப்பால் ஏற்படும் கண் நோய்க்கு 'விழித்திரை நீரிழிவுநோய்' (டயபடிக் ரெட்டினோபதி) என்று பெயர். இந்நோயின் காரணமாக கண்ணில் உள்ள இரத்தநாளங்கள் வீக்கமடை ந்து இரத்தக்கசிவு ஏற்படும். உடலில் மற்றப் பாகங்களை விட விழித்திரையில் அதிக மாக ஏற்படும் இரத்தக்கசி வால் விழிததிரையின் ஒக்சி ஜனதன்மை குறைகிறது. இத னால் விழிததிரை வீக்கமடை ந்து பார்வையின் அளவு குறையும். இந்தப் பாதிப்பை மண்டும் சரிசெய்ய முடியாது.

### சிகிச்சை முறை

இதற்கு சிகிச்சை அளி த்து இருக்கும் பார்வையை பாதுகாத்துக்கொள்ள முடியும். ஆகையால் இந்நோயை முன னரே கண்டறிந்து பார்வை யின் அளவைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இதற்கு 'ஆர் கான் லேசர்' மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த லேசர் இரத்தக கசிவு ஏற்படும் இடங்களில் செலுத்தி கசிவு தடுக்கப்படு கிறது. இந்தக்கசிவை FFA (Fundus Fluorecene Angio gram) என்ற பரிசோதனை மூலம் கண்டறிந்து சிகிச்சை யளிக்கப்படுகின்றது. முக்கிய மாக முறையான மருத்துவ சிகிச்சை தேவை.

இந்நோயால் பாதிக்கபபட்டவர்கள் வருடம் தோறும் கண்பார்வை பரி சோதனை செய்துகொள்ள வேண்டும்.

நீரிழிவு நோயால பாதிப்புக்குள்ளானவர்கள் வருடத்திற்கு ஒருமுறையும், விழித்திரை பாதிப்புக்குள ளானவர்கள் ஆறு மாதத்திற்கு ஒருமுறையும் கண்பார்வை பாிசோதனை செய்யவேண டும். இந்நோய் வம்சாவழி யாக (பரம்பரை) வரக்கூடிய நோயாதலால் அதனால குடும பத்தில் உள்ள அனைவரும பாிசோதனை செய்துகொள ளுதல் அவசியம்.

பொதுவாக சர்க்கரை யின் அளவை கட்டுப்பாட்டில வைத்திருத்தல், ஒரு வருடம அல்லது ஆறு மாதத்திற்கு ஒருமுறை கண் பரிசோதனை செய்துகொள்ளுதல், லேசா சிகிச்சை தேவையானபோது உடன செய்துகொள்ளுதல, தனக்குத்தானே மருந்துகள் எடுத்துக்கொள்ளாமல் மரு த்துவரின் ஆலோசனையை நாடுதல் போன்றவை நோய க்குச் சரியான நிவாரணமாகும்

# மண்ணை வளமாக்கும் நெல் உமிக்கரி

இலங்கையில் வரு டாந்தம் எட்டரை இலட்சம் ஹெகடயா நிலபரப்பில் நெல செய்கை பண்ணபபடு கின்றது. ஒரு ஹெக்டயரிலிரு ந்து சராசரியாக 4.00 மெற்றிக் தொன் விளைச்சல் பெறப் படுகின்றது. இதில் 68 - 70 வீதம் வரை தானிய அரிசியாக வும், மீதுதியானவை அதாவது 30-32 வீதம் உமியாகவும் வெளியேற்றப் படுகின்றது. நெல்லில் உமி 25 வீதம் காணபடுமாயின் வருடாந்தம் கிட்டத்தட்ட எட்டரை இலட்சம் மெற்றிக்தொன் உமியை உற் பத்தி செய்கின்றோம். ஆனால் இதில் மிகச்சிறியளவையே பயன் படுத்துகின்றோம்.

அரிசியைப் பதப்படுத் தும்போது எரிபொருளாகவும், ஓடு, செங்கல் என்பனவற்றை உற்பத்தி செய்யும்போதும் இதனைப் பயன்படுத்துகின் றோம். இவற்றைத்தவிர வேறு எதற்கும் உமியைப் பயன்படு த்துவதில்லை. அரிசி உற்பத் தியில் வெளியேறும் ஒரு கழிவுப் பொருளாகவே உமி கருதப் படுகின்றது. சூழலை மாசுபடு த்தும் பொருளாகவே உமி விளங்குகின்றது. ஆனால உமி யைக் கரியாக்கி வயலிற்கு இடும்போது அரிய சேதனப் பசளையாக விளங்கும். சுற் றாடல் மாசுபடுவதையும் தடு க்கலாம். இது மண்ணைத் திருத்தும் ஒரு மண் திரு த்தியாகும். இதனை இடுவ தன் மூலம் பின்வரும் நன் மைகளை நாம் அடையலாம்.

❖ அதிக விளைச்சலைப் பெறலாம்.

❖ சிலிக்கனை வழங்கும்: விவசாயிகள் நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் ஆகிய பசளைகளை மாத்தி ரமே இடுகின்றனர். ஆனால் வயலிலிருந்து வருடாந்தம் பெருமளவான சிலிக்கா என் னும் போசணைச்சத்து அக ற்றப்படுகின்றது. இதனை எவரும் மீண்டும் பசளையாக இடுவதில்லை. நெல் உமியை இடும்போது சிலிக்கா மீண் டும் வயலுக்குக் கிடைக்கும். சிலிக்காவை நெல் உறிஞ்சு வதால் நோய், பீடைகளை நெல் எதிர்த்து வளரும். நெல் சரிந்துவிழுவது தடுக்கப்ப டும். பகுதியாக உமியை எ த்து இடும்போது சிலிக்காவை காவை நெல் உறிஞ்சும்.

❖ மண்ணில் பௌதீக இயல் புகளை மேம்படுத்தும்.

❖ நீரைப் பிடித்து வைத்தி ருக்கும் 'இயல்பு விருத்திய டையும்.

❖ மண்ணில் உருவாகும் நச் சுத் தன்மையைப் போக்கும்.

❖ சுயாதீன நீர் இல்லாதிரு க்கும்.

❖ மண்ணில் கற்றயன் மாற் றீட்டுக் கொள்ளளவை அதி கரிக்கும்.

நெல்லிற்கு ஏக்க ரொன்றிற்கு குறைந்தது 250 கிலோகிராம் கரியாக்கிய உமி யையாவது இடல்வேண்டும். ஆனால் இதனைவிட அதிகள வில் இடமுடியுமாயின் சிறப் பானதாகவிருக்கும்.

உமியை கரியாக்கியே இடல்வேண்டும் என்பதனை ஞாபகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

## மருத்துவ குறிப்புகள்

* கறிவேப்பிலையை பச்சையாக அரைத்து பசும் பாலில் கலந்து கூந்தலுக்கும், அதன் வேர்ப் பகு திக்கும் தடவி ஊறவிட்டு, குளி த்தால் கூந்தல் கருமையுடன் நன் றாக வளரும்.
* முள்ளங்கி சாற்றை சம அளவு மோருடன் கலந்து முகத்தில் தடவி ஒருமணி நேரம் ஊறவைத்து பிறகு குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். முகப்பருக்கள் மறையும்.

# புரியாத அர்த்தங்கள்

(03ஆம் பக்கத் தொடர்ச்சி...)

''ரீச்சர் நீங்களா பேசுகி ன்றீர்கள்?'' சிரித்துக்கொண்டே கேட்டாள் நளினி.

''நீர்தானே கேட்டீர். என் மனதில் உள்ளதைக் கூறி னேன். தற்ஸ் ஆல்''

''ரீச்சர். உங்களிடம் என க்குப் பிடித்ததுகுணமே இதுதான். உள்ளதை உள்ளபடி ஒப்பினாய் கதைக்கும் சுபாவம் பெரும்பாலா னவர்களிடம் கிடையாது. ஏன் நான்கூட சில விடயங்களை கூறாது மனதில் பதுக்கிவிடு வேன். நீங்கள் அப்படியில்லை. எதையும் மறைக்காமல் கூறிவிடு கின்றீர்கள்'' என்று சிரித்தாள்.

''நளினி என்னுடன் ஸ்ரூம்மேற்'றாகத்தான் நீர் இரு ந்தீர். ஆனாலும் உமது நல்ல உள்ளத்தை புரிந்துகொண்டே நாம் சினேகிதிகளானோம். உன் னிடம் நான் எதையும் மறைத்த தில்லை. மறைக்கவும் மாட்டேன். இதுதான் எமக்குள் மலர்ந்த அன் பின் நட்புறவு''

''ரீச்சர்! நீங்கள் என்ன தான் கூறினாலும் உங்களால எனக்குக் கிடைத்தது இப்பெரு வாழ்வு''

''அப்படிச் சொல லாதே நளினி. உன்னுடைய நல்ல மனதுக்குக் கிடைத்த நல் வாழ்வு நான் இதற்கு சிறு உதவி செய்தேன்.''

''இது உங்கள் பெருந் தன்மை. 'நல்லாரைக் காண்பது வும், நல்லார் சொற்கேட்பதுவும், நல்லாரோடு இணங்கியிருப்பது வும் நன்றே' என்ற முதுமொழிக் கிணங்க உங்கள் உறவினால் கிடைத்த வாழ்க்கை. உங்களைப் போல நல்லவர்களை இனம் காணும் பக்குவமில்லை எனக்கு இருந்ததில்லை. மிஸஸ் செல லையா ரீச்சரைப் பற்றி நான் வைத்திருந்த கணிப்பை இல்லா மற்செய்து அவவுடைய நல்ல மனதை இனங்காட்டிவைத்தது நீங்களில்லையா?'' நளினியின் விழிகளில் பனித்துளிகளாக நீர்முத்துக்கள் திரண்டிருந்தன.

''சரி! சரி! நீ உணர்ச்சி வசப்படாதே. உனக்கு நான் உத வினேன். அதனால் இப்போ நீ,' உன் கணவர் எல்லோரும் எனக்கு ஓர் நல்ல வாழ்வை அமைத்துத்தருகின்றீர்களே. இது போதாதா? எல்லோருக்கும் நாம் நல்லவர்களாக இருக்க முடியாது. நமக்கு நாமே நல லவர்களாயிருந்தால் போதும். மற்றவர்கள் எம்மை மதிப் பார்கள். அவ்வளவுதான்''

சுவரிலுள்ள கடிகாரம் மணி பன்னிரண்டு என அறி வித்தது. நளினி எழுந்து ''அட அதற்குள் பன்னிரண்டாகிவிட் டது. நான் புறப்படுகின்றேன். பின்னேரம் வீட்டுக்கு வாருங் கள் ரீச்சர். மிகுதியை அங்கே கதைக்கலாம்'' என்று சிரித்தாள்.

''அவரும் பின்னேரம் வருவாரா?''

''நிட்சயமாக. அவர் சொல்லித்தானே நானே வந் தேன்''

''அப்படியா? நிட்சய மாக நான் வரமாட்டேன்''

''ரீச்சர் நீங்கள் என்ன...'' என்று நளினி அவள் கரங்களைப் பற்றினாள்.

''நளினி, நீ பயப் படாதே! அவரையே என்னன தில் வரித்துவிட்டன. வாயால் வேறு என் சம்மதம் சொல்ல ணுமா?''

''சொன்னால் என்ன ரீச்சர்?''

''என்னால் அப்படிச் சொல்லமுடியாது நளினி. பிளீஸ் எனக்கு சின்ன கெல்ப் செய் அதுபோதும்'' என்று கூறி டயறிக்குள் எழுதிவைத்த பேப் பரை எடுத்து ஒரு கவரில் ட்டு அவளிடம் நீட்டினாள்.

''என்ன இது? கடிதமா?''

''இல்லை நளினி, இது என் மனம். நான் பேச நினைத்ததை எல்லாம் நேரில் சொல்ல என்னால் முடியாது. ஆனால் இது பேசும். நீ இதை அவரிடம் கொடு. பின்பு எப்படி என்று பாரேன். சரி சந்தோஷ மாகப் போய் வா'' என்று அவள் கன்னத்தில் முத்தமிட்டு அனு ப்பிவைத்தாள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்களின் வளர்ச்சியில் தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம்

**செ.பூங்கோதை**
தலைவர்,பொருளியல்முகாமைத்துறை
வவுனியா வளாகம்.

**த**கவல் தொழில்நுட்பம் என்ற எண்ணக்கருவானது பல ஆண்டுகட்கு முன் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பிரதான விடயமாகும்.இது நவன யுகத்தில அனைத்து நிறுவனங்களாலுமே பின்பற்றப்பட வேண்டியதும், பின்பற்றப்பட்டு வருவதுமான முக்கிய ஒரு நுட்ப வழிமுறையாகும். இன்று உலகளாவிய ரீதியில் வெவ்வேறுபட்ட தொழில் முயற்சியில் ஈடுபடும் பல்வேறுவகைப்பட்ட நிறுவனங்களை எடுத்து நோக்குவோமாயின், ஓரளவு எல்லா நிறுவனங்களுமே தகவல் தொழில்நுட்பத்தை வெவ்வேறுபட்ட கட்டங்களில, வெவ்வேறுபட்ட வகையில் பயன்படுத்தி வருகின்றன எனறே கூறவேண்டும்.

தகவல் தொழிலநுட்பம் என்பதற்கு வெவ்வேறு எழுத்தாளர்கள் வேறுபட்ட ஆனால ஒருமித்த கருத்துடைய விளக்கங்களையும், வரைவிலக்கணங்களையும் வழங்கியுள்ளனர். பொதுவாக தகவல் தொழில்நுட்பம் என்பது கணனியையும், தொலைத் தொடர்பு முறையையும், அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும உள்ளடக்கும். இந்தத் துறையானது மிகவும விரைவாகவும், திறமையாகவும் முன்னேறக் காரணம் இது தன்னகத்தே பலவேறுபட்ட நுட்பங்களைக் கொண்டிருப்பதாகும்.

ஒரு தொழில் முயற்சி நிறுவனமானது தனது வாடிக்கையாளரை இலகுவாகக் கவருவதற்கும்,அவர்களைத் தொடர்ந்து தன்னகத்தே வைத்திருப்பதற்கும் தகவல் தொழில்நுட்ப வழிமுறை பெரிதும் உதவுகின்றது. இன்றைய உலகில் கணனிகளோ அல்லது அதன் உப பாகங்களோ இன்றி எந்த நிறுவனமோ திறமையாக இயங்கமுடியாத நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் தகவலதொழிலநுட்ப வளர்ச்சியே.

இத்தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் நிறுவனங்களில் பல்வேறு வகைப்பட்ட அமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டும், ஏற்படுத்தப்பட்டும் வருகின்றது. ஒரு குறிப்பிட்ட வேலையை ஒன்றுக்கு மேற்படடவாகள் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் மாறி பல்வேறுபட்ட வேலைகளை ஒரு கணனியே செய்யும நிலைக்கு இன்றைய் நிறுவனங்களில் கணனிகள் முக்கிய பங்கு வகிப்பதற்கும் இத் தகவல் தொழில்நுட்ப முன்னேற்றமே காரணம் எனலாம்.

பொதுவாக வியாபார நிறுவனமொன்றின் நடவடிக்கைகள் வெளியக சூழலினால் பெரிதளவு பாதிபபடைவதுணடு. எனவே இத்தகைய வெளியக சூழல் மாற்றங்களினால் ஏற்படும் தாககங்களுக்கேற்ப தம்மை ஈடு செய்யக்கூடிய சரியான நுட்ப முறைகளை அவ்வப்போது தம்மில் சேர்த்துக் கொள்வதும் அதைப் பிரயோகிப்பதும் அத்தியாவசியமானதாகும்.இதனால் தகவல் தொழில்நுட்பத்தின் முககியததுவம் இங்கு அவசியமானதாகும்.

பொதுவாக மனிதனால் செய்யப்படும் ஒரு வேலையில் ஏற்படும் காலதாமதத்தையும், வழுக்களையும், பிழைகளையும் திருத்தும் பொருட்டே இக் கணனிகள் அறிமுகப்படுத்தப்பட்டன எனலாம். எனினும் கணனி என்பது ஒரு புத்தியற்ற விசுவாசமான சேவகன் என அழைக்கப்படுகிறது. காரணம், தனியே கணனியால் எந்த ஒரு வேலையையும் செய்யமுடியாது. சரியான ஒரு அறிவுறுத்தல் அதற்குக் கொடுக்கப்பட்டாலே அதனால அவ்வேலையைத் திறம்பட செய்துமுடிகக முடியும். இவ்வாறு ஒரு கணனி தனது கடமையைச் சரிவரச் செய்து முடிக்க வேண்டுமாயின் அதற்குச் சரியான கடினபாகங்களும் (Hardware), மென்பாகங்களும (Software), சரியான வழி நடத்துநரும் அவசியமாகும். இக் காரணிகளில் ஏதாவதொன்றில் பிழை இருந்தாலுமே அக் கணனியால் தனது கடமைகளைச் சரிவரச் செய்யமுடியாது. இதற்கும் மேலாக தொலைத் தொடர்பு வசதி என்பது இன்னோர் முக்கிய விடயமாகும்.

தகவல் தொழில்நுட்பம் என்பது கடினபாகம.மென்பாகம், தொலைத்தொடர்பு வலைப் பின்னல் (Tile - Communication Net - work) ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கடினபாகம் என்பது கணனி ஒன்றில் காணப்படும் உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் குறிக்கும். மென்பாகம் என்பது இக்கணனி குறிப்பிட்ட சில கடமைகளைச் செய்யும் பொருட்டு அதற்குக் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்கள் (Progra mmes) ஆகும்.

தொலைத் தொடர்பு என்பது தேவையான தொலைத் தொடர்பு ஊடகங்களும் அவற்றுக்கிடையேயான சரியான தொடர்புபடுத்தலுமாகும். இதற்கென வேறுபட்ட தொடர்பு சாதனங்களும் வலைப்பின்னல் முறைகளும் வெவ்வேறுபட்ட நிறுவனங்களினால் வேறுபட்ட தேவைகளின் பொருட்டு பயன் படுத்தப்படுகின்றது.

இனி, எவ்வாறு இத் தகவல் தொழில்நுட்பம் நிறுவனங்களின் வளர்ச்சியில் பங்கு வகிக்கின்றது என நோக்குவோம். நிறுவனங்களை மூன்று பிரதான வகையாகப் பிரித்து நோக்கலாம். உற்பத்தி நிறுவனங்கள், விற்பனை நிறுவனங்கள் அல்லது சந்தைப்படுத்தல் நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள்.

**உற்பத்தி நிறுவனங்**களை எடுத்து நோக்குவோமாயின், அந்நிறுவனங்கள் தமது உற்பத்தியை மேம்படுத்தவும, விரைவாகச் செய்யவும் எத்தகைய நுட்பமுறைகளைப் பின்பற்றி வருகின்றன என நோக்கலாம். பொதுவாக உற்பத்தி நிறுவனங்கள் கணனி மயப்படுத்தப்பட்ட வடிவமைப்பு முறைகளையும் (CAD), கணனி மயப்படுத்தபபட்ட உற்பத்தி முறைகளையும் (CAM) தமது உற்பத்தியைத் திறம்பட சரியாகவும் செய்வதற்குப் பயன்படுத்துவதோடு தாம் எநதக கைததொழிலில் இருக்கின்றார்களோ அத்தொழிலில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் போட்டி போடவும் அதனூடாகப் போட்டி ரீதியான நயத்தை (Competitive Advantage) அடையக்கூடியதாகவும் இருக்கும். அத்துடன் வாடிககையாளரின் விருப்பத்திற்கும் தேவைகேற்ப உரிய பொருளை உற்பத்தி செய்து (Justin - time Production) விநியோகிக்கக் கூடியதாக இருக்கும்.

அமெரிக்காவில் உள்ள பெரும்பான்மையான ஆடை உற்பத்தி நிறுவனங்கள் இத்தகைய கணனி மயப்படுத்தப்பட்ட உற்பத்தி முறைகளையே பின்பற்றி வருகின்றன. காரணம் குறை விருத்தி நாடுகளைப் போலல்லாது அந்நாடுகளில் ஊழியத்தின் பெறுமதி அதிகமாக இருப்பதால் இத்தகைய உயர் நுட்பங்களைப் பயன்படுத்துவது இலாபகரமானதாகவும், சுலபமானதாகவும் இருக்கும். மேலும் முன்னர் செய்யப்பட்ட ஆடை வடிவமைப்புக்களை இலகுவாக எதிர்காலத்தில் மாற்றுவதற்குக் கணனி மயபபடுத்தப்பட்ட வடிவமைபபு முறைகளும பின்பற்றப்பட்டு வருகின்றன.

அடுத்ததாகச் **சந்தைப் படுத்தல, சேவை** நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களை நோக்குவோம்.உதாரணமாக, ஒரு சிறப்புச் சந்தையை நோக்கினால் அங்கு நுகர்வோர் தமக்கு விரும்பிய பொருட்களைப பெற்றுக்கொள்ள வசதியாக அவற்றின் விலை, கையிருபபு என இதற்கெனச் சிறப்பாக உருவமைக்கப்பட்ட பொறியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

நுகர்வோர் தாம விரும்பிய பொருட்களை கடன அட்டைகளை (Credit Cards) வழங்குவதன் ஊடாகப் பெற்றுக்கொள்ளமுடியும். இக் கடன் அட்டைகள் இக்குறிப்பிட்ட நுகர்வோன் வாடிக்கையாளராக இருக்கும் வங்கியினால் அவரது நம்பிக்கைத் தன்மையைப் பொறுத்து வழங்கும் பெறுமதி வாய்ந்த ஒரு அட்டையாகும்.

நுகர்வோர் தான் நினைத்த பொருளினை விரும்பிய இடத்தில் கொள்வனவு செய்ய முடியும. இதனால் குறிபபிட்ட நுகர்வோன் செல்லும் இடமெல்லாம் பணததைக் கொண்டுசெல்ல வேண்டிய தேவை குறைகிறது. அத்துடன் பாதுகாப்பும் கூட. இத்துடன் அட்டைக்கென தனியான இரகசிய இலக்கம் இருப்பதால் வேறு ஒருவர் அதைக் களவெடுத்தாலும் பயன்படுத்த முடியாது. இதற்குக் கிட்டத்தட்ட சமமானதான இன்னோர் விடயமே வங்கியில் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் பண அட்டை. இவ்வட்டையை குறிப்பிட்ட வங்கியிலோ அல்லது அதன் கிளைகளிலோ இட்டுப் பணத்தைப்பெற்றுக் கொள்ளவும், வைப்புச் செய்யவும் முடியும். இவை அனைத்துமே தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் ஏற்பட்டவைதான்.

இவைதவிர, **நிறுவனங்களுக்கிடையே தகவல்களைப் பரிமாற** இலத்திரனியல் தகவல் பரிமாற்ற முறைகளும் (Electronic Data interchange) ஒரு நிறுவனத்திலிருந்து இந்னோர் நிறுவனத்திற்குப் பணப் பரிமாற்றத்தைச் செய்ய இலததிரனியல் நிதிமாற்றல் முறைகளும் (Electronic Fund Transfer) பன்பற்றப்படுகின்றன. இவை தவிர உயர்மட்ட, நடுத்தர முகாமையாளர்களால் குறிபபிட்ட சில தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு இதற்கான மென்பாகப பொதிகள் (Software packages) சந்தைப்படுத்தப்படுகின்றன. Decision Support (DSS) Systems, Executive Information Systems (EIS) என்பன அவற்றுள சில. இவை அனைத்தின் எழுகையால் கணனியில் பூரண தேர்ச்சியற்ற ஒரு பாவனையாளரும் தனக்கு வேண்டிய தீர்மானத்தையும் கடமையையும் இலகுவாகச் செய்யவும் மற்றவர்களை எதிர்பார்க்காது இருக்கக் கூடியதாகவும் உள்ளது. அத்துடன் நிறுவனத்தின் ஒரு பகுதியில் அல்லது ஒரு அலுவலகத்தில் நடக்கும் கலந்துரையாடலை இன்னொரு இடத்தில் இருந்து செவிமடுக்கவும், பார்க்கவும் அதற்குத் தமது கருத்துக்களை வழங்கக் கூடியதாகவும் இருக்கும் (Tele Conferencing). இவைதவிர சில விஞ்ஞான நோக்கங்களுக்காக அதாவது, ஏவுகணைகளைப் பரிசோதித்தல், விண்கலங்களை அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளும் கூடக் கணனியினதும் தகவல் தொழில்நுட்பமுறைகளையும் கொண்டு சரிபார்க்கப்படுகிறது. மேலும் மனித மூளை எவ்வாறு செயற்கையாகச் செயற்பட முடியும் என்பதை Artificial Intelligence ஊடாகச் செயற்படுத்தி வருகிறார்கள். இதன் ஒரு பிரிவாக நிபுணத்துவ முறைமைகள் (Expert Systems) பல்வேறு தேவைகட்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது நிபுணர் ஒருவர் செய்யும் வேலையை ஒரு கணனியும், அதன் இதர பாகங்களும் மென்பாகப் பொதிகளும் சேர்த்து எவ்வாறு செய்கின்றன என்பதாகும்.

இது மருத்துவ, விஞ்ஞான அறிவியல் ஆலோசகர் தேவைக்குப் பெரிதும் பயன்படுததப்பட்டு வருகின்றது. மேலும் ஒரு நாட்டின் இராணுவ, அரசியல் இரகசியங்கள் பேணப்படும அலுவலகமும ஒரு கணனி மயப்படுத்தப்பட்ட ஒன்றே. அங்கு குறிப்பிட்ட சிலரைத் தவிர வேறு நபர் உட்புகுந்தாலே அதை வெளிக்காட்டும் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும். இவ்வகையில் சர்வதேச வலைப் பின்னல் முறையும் (Internet) இலத்திரனியல் கடிதமுறையும் (E -Mail) இன்று அனேகமாய் எல்லா மக்களாலேயுமே பயன்படுத்தப்பட்டுவரும் பொது விடயங்களாகும். இவையூடாக உலகளாவிய ரீதியில் அரசியல், சமூக, பொருளாதார, மருத்துவ விடயங்களை அவ்வப் போது அறியமுடிகிறது.

(06ஆம் பக்கம் பார்க்க...)



யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையினால் நடத்தப்படும் கணனிப பயிற்சி நெறியில் நான்காவது தொகுதி மாணவர்களுடன கூட்டுறவுசபைத் தலைவர், சபையின் முன்னாள் செயலாளர், தற்போதைய செயலாளர் மற்றும் கணனிப்பயிற்சி ஆசிரியை, கூட்டுறவு சபையின் கல்வி விஸ்தரிப்பு, மகளிர் விவகார உத்தியோகத்தர்களும் காணப்படுகிறார்கள்.

## கூட்டுறவுத் தகவல் களஞ்சியம்

☞ இலங்கை கூட்டுறவுக் கைத்தொழில் சங்கமொன்று 1964இல் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

☞ இலங்கையில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமொன்று 1966இல் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

☞ இலங்கையின் இறப்பர் சம்மேளனம் 1967இல் ஆரம்பிக்கப்பட்டது.

☞ 1968இல் இலங்கையின் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்காக லெயிட்லோ தலைமையிலான ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

☞ 1969இல் இலங்கையின் முதலாவது மரணசகாய கூட்டுறவுச் சங்கம் காலி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

☞ கூட்டுறவுச் சங்கங்களுக்கான 35ஆம் இலக்க திருத்தச்சட்டம் 1970இல் கொண்டு வரப்பட்டது.

அதே ஆண்டில் லெயிட்லோ ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் கூட்டுறவாளர் சங்கங்களின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

☞ [illegible]இல் [illegible] முகாமை சேவை நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 வருட கூட்டுறவுசேவையில் சு.சிவசுப்பிரமணியம்



யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையின் மாவட்ட செயலாளராக கடமையாற்றிய சுப்பையா சிவசுப்பிரமணியம் அவர்கள் 2004ஆம் ஆண்டு சித்திரை மாதத்துடன் ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் தனது பாடசாலைக் கல்வியினை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை பேராதனைக் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டுள்ளார். 1970ஆம் ஆண்டு வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையினால் விரிவுரையாளராக நியமக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட கூடட்டுறவுக் கல்லூரியில பணியாற்றியதோடு பல வெளிக்களப் பயிற்சிகளிலும் விரிவுரையாற்றியுள்ளார். யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பதிகாரியாக மிக நீணட காலம் கடமையாற்றியுள்ளார்.

31-07-1972இல் வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையில் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சேவையில் இணைக்கப்பட்டபோது தேசிய கூடடுறவுச் சபையின் பணியாளரானார்.

இவர் தனது பணியினை தொடர்ந்தும் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபையின் யாழ். மாவட்டக் கிளையில் ஆற்றிவந்தார். இவர் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச சபையின் யாழ்.மாவட்டக்கிளையின மாவட்ட செயலாளராகவும் சிறிது காலம் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபையின் வவுனியா மாவட்டக் கிளையின் மாவட்ட செயலாளராகவும் கடமையாற்றி வந்தார்.

இவர் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபையின் யாழ் மாவட்ட கிளையின் மாவட்ட செயலாளராக கடமையாற்றி வந்தபோது கூட்டுறவு சபையின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக 1989ஆம் ஆண்டு தேசிய கூட்டுறவு சபையின் யாழ்.மாவட்டக் கிளை ஒரு தனி நிறுவனமாக 'யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு சபை' என்னும் பெயரில் பதிவு செய்யப்பட்டது. அத்தருணம் திரு.சு.சிவசுப்பிரமணியம் அவர்களே யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபையின் செயலாளராக நியமிக்கப் பட்டார். இவர் ஓய்வுபெறும் வரை தொடர்ந்தும் செயலாளராகக் கடமையாற்றிவந்தார்.

கூட்டுறவு அமைப்பில் காலத்திற்கு காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் இவர் 1970ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கூட்டுறவு இயக்கத்திற்காக அளப்பரிய சேவையாற்றி வந்தார்.

1989இல் பதிவுசெய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையினை கட்டிவளர்ப்பதில் பெரும்பங்காற்றி வந்துள்ளார். சபையின் வீரசிங்கம் மண்டப கட்டிடத் தொகுதி புனரமைப்பில் இவரது பங்கு அளப்பரியதாகும். அத்துடன் கூட்டுறவு மகளிர் குழுக்களின் செயற்பாட்டிலும் இவர் மிகுந்த அக்கறையுடன் செயலாற்றி வந்துள்ளார்.

இப் பெரியார் மேலும் பலகாலம் தனது பங்களிப்பினை கூட்டுறவு இயக்கத்திறகு ஆற்றுவதற்கு அவர் நீண்டகாலம் சிறப்புற வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

கூட்டுறவாளர்.

## நிறுவனங்களின்....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகவே, மேற்குறிப்பிடப்பட்ட நுட்பமுறைகள்,அவற்றின் செயற்பாடுகள், நன்மைகள் அனைத்துமே தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பரிமாணங்களே. இப்போது நாம் இருபத்தோராம் நூற்றாணடில காலடிவைத்துள்ளோம். இன்னும் பல தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் காண வேண்டிய, அனுபவிக்க வேண்டிய தேவை நமக்குள்ளது. அலுவலகங்களில் கூட ஊழியர்களோ, தாள்களோ, பணமோ புழக்கத்தில் இருக்காது. முழுக்க முழுக்க கணனியும் அதன் உபபாகங்களுமே இருக்கும் இடமாகவும், ஊழியர்கள் தத்தமது வீடுகளில் இருந்தே அலுவலகக் கடமைகளை முடிக்கக்கூடியதாகவும், மேலதிகாரிகள் தமது ஊழியர்களைத தமது வீட்டில் இருந்தே மேற்பார்வை செய்யக் கூடியதாகவும், அவர்கட்கு வேண்டிய அறிவுறுத்தல்கள் வழங்கக்கூடியதுமான ஒரு நிலை வெகுவிரைவில் வரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதேபோல் தவறுகளைத் திருத்தவும் நேரத்தை மீதப்படுத்தவும் பயன்படுத்தப் படும் இந்நுட்பமுறைகளைச் சரியாகவும், திறமையாகவும் பயன்படுத்தினாலே தொடர்ச்சியான நன்மையினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

நன்றி முனைவு மலர் - 2

"ஐக்கியம், சிக்கனம், குடியாட்சி, நெறிமுறைமை, சுயாதீனம் என்ற அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு அமைக்கப்படுவதே கூட்டுறவு
W.P. [illegible]

## நட்டத்தில்....

இன்றியும் சிரமப்படுகின்றன. இந்நிலை மாறவேண்டும். பொதுவாக அங்கத்தவர்கள் நூறு ரூபாவிற்கு பங்கு ஒன்றை வாங்குவதுடன் நின்றுவிடுகின்றனர். அடைந்துளள நட்டத்தை ஈடுசெய்து செயறபடு மூலதனம், மற்றும் திரவச் சொத்து இல்லாமை போன்ற பிரச்சினைகளிலிருந்து சங்கங்களை விடுவிப்பதற்கு அங்கததவர்கள் மேலதிகமான பங்குகளை வாங்குதல்வேண்டும்.

சென்ற நிதியாண்டில் இச்சங்கம் 13லட்சம் ரூபாவை வங்கிக்கு வட்டியாகச் செலுத்தியுள்ளது. வட்டி செலுத்தாது பெறப்பட்ட உள்ளகக் கடன்களையும் சேர்த்தால் இத்தொகை ரூபா 15 லட்சத்திற்கு மேலாகலாம்.அங்கத்தவர்கள் தேறிய பங்கு மூலதனத்தை இட்டிருந்தால் இவ்வாறு செலுத்திய வட்டியில் பெரும்பகுதியை மீதப் படுத்தியிருக்கலாம்.

எனவே அங்கத்தவர்கள் தமது சங்கங்களுக்கு மொத்த மூலதனத்தை உருவாக்குவதல் மிகுந்த அக்கறை காட்டுதல் வேண்டும். சங்கங்களுக்கு மொத்த மூலதனம் இல்லாத விடத்து அரச நிதிகளிலிருந்து கடன்பெறச் செல்லும்போது அங்கு வெளியாரின் சட்டப்படியான கட்டுப்பாடு அதிகரிக்கின்றது. இதனால் சங்கங்கள் தமது சுயாதீனத்தை இழக்கின்றன. இது கூட்டுறவிற்கு ஒரு ஆரோக்கியமான நிலைப்பாடு அல்ல.

## யாழ்.ப.நோ.கூ.ச...

இக் கருத்தரங்கில் சங்கத தலைவர் சு.சிறில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, .

எமது சங்க எல்லைப் பரப்பினுள் உள்ள சகல அங்கத்தவர்களின் முழுமையான தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளது.

இந்நிலையில் எமது சங்க கிராமிய வங்கி மூலமாக யு.என்.டி.பி நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இக்கடன் திட்டம் சுழற்சி முறையில் கட்டம் கட்டமாக அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கும்.

இத்திட்டத்திற்கு அங்கத்தவர்கள் மற்றும் சகல கிளைக் குழுககளும் பரண ஒத்துழைப்பை நல்கி வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இப் பயிற்சிக் கருத்தரங்கில் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சு.கணேசு, இ.புவன்ராஜ் ஆகியோரும் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் கல்விப் பயிற்சியளிப்புஉத்தியோகத்தா வி.கே.சிவ்ராசசுந்தரம், மற்றும் யு.என்.டி.பி நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## இயக்குநர்சபைத் தெரிவு

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.4.சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது புதிய இயக்குநர்சபைத் தெரிவு இடம்பெற்றது.

சங்கத்தின் புதிய தலைவராக வி.சுப்பிரமணியம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மற்றும எஸ்.ஆர்.பிரான்சிஸ் (உ.தலைவர்) இயக்குநர்களாக அ.லூயிஸ், ஜே.ஈ.ஆனந்தராசா எஸ்.செல்வரத்தினம், தி.தர்மசீலன், செ.கோபாலகிருஸ்ணன ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## 82ஆவது சர்வதேச கூட்டுறவு தினம்

**யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கடையிலான பேச்சு, கட்டுரை, சித்திரம் மற்றும் வினாவிடைப் போட்டிகள்**

மேற்படி போட்டிகளில் 10-11, 12-13 தர மாணவர்கள் கலந்துகொள்ளலாம்.போட்டிகள் யாவும் தமிழமொழியிலேயே நடைபெறும். விண்ணப்பங்கள் யாவும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு பாடசாலை இலசசினை பொறிககப்பட்டு அனுப்புதல்வேண்டும்.

போட்டிக்கான தலைப்புகள் வருமாறு,

| விடயத்துறை | தரம் | தலையஙகம் |
| --- | --- | --- |
| பேச்சு | 10-11 | கூட்டுறவினை வாழ்க்கையின் சகல துறைகளுக்கும் வியாபிக்க முடியும். |
| கட்டுரை | 10-11 | சமூக,பொருளாதார முரண்பாடுகளை ஒழித்தல் கூட்டுறவின் நற்பணியாகும். |
| சித்திரம் | 10-11 | கூட்டுறவாளர் சுற்றாடலுக்கு நன்மை பயப்பவராவார். |
| பேச்சு | 12-13 | கூட்டுறவுச் சங்கமானது ஜனநாயகம் தொடர்பான பள்ளிக்கூடமாகும். |
| கட்டுரை | 12-13 | கூட்டுறவின் நற்பண்புகள் சிறந்த சமூக அமைப்புக்கான அடித்தளமாகும். |
| சித்திரம் | 12-13 | கூட்டுறவானது மக்களை அடிப்படையாக கொண்ட ஓர் அமைப்பாகும். |

ஒவ்வொரு தர போட்டியாளர்களுக்கும் பேச்சு, கட்டுரை மற்றும் சித்திரம் ஆகிய போட்டிகளுக்கான தரப்பட்டுள்ள மூன்று தலையங்கங்களுள் ஒரு தலையங்கத்தினை போட்டியில் பங்குபற்றும்போது சீட்டிழுப்பு. மூலம் தெரிவு செய்து வழங்கப்படும்.

1. பேச்சுப்போட்டி தரம் -12,13 -நேரம் 5-6 நிமிடம்
2. பேச்சுப்போட்டி தரம் -10,11 -நேரம் 5-6 நிமிடம்
3. கட்டுரைப்போட்டி தரம் -12,13 -நேரம் 11/2 மணித்தியாலம் *(1500 சொற்களுக்கு குறையாமல் இருக்கவேண்டும்)*
4. கட்டுரைப்போட்டி தரம் -10,11 -நேரம் 1மணித்தியாலம் *(1000 சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்)*
5. சித்திரப் போட்டி தரம் -12,13 -நேரம் 2மணித்தியாலம்
6. சித்திரப் போட்டி தரம் -10,11 -நேரம் 2 மணித்தியாலம்

மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் இப்போட்டிகளில் தெரிவுசெய்யப்படுவோர் மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் பேச்சு, கட்டுரை மற்றும் சித்திரம் ஆகிய போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள். மாகாண மட்டத்தில் முதலிடத்தினைப் பெறும் போட்டியாளர்கள் மட்டும் தேசிய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

வினாவிடைப் போட்டிகளின் பொருட்டு கற்கும் தரங்களைக் கவனத்தில் கொள்ளாது பாடசாலை மட்டத்தில் ஒரு குழு போட்டியில் பங்குபற்றலாம். இவ் வினாவிடைப்போட்டியில் ஒரே பாடசாலையைச் சேர்ந்த 04 பேரைக் கொண்ட ஒரு குழு அமையப் பெறல்வேண்டும். இப்போட்டிக்கான குழுவில் பல்வேறு விதத்திலான மாணவர்கள் உள்ளடங்குகின்ற படியால் அவர்கள் அறிந்த மொழியில் வினாக்களைப் பெற்றுக் கொள்வதற்கும், பதிலளிப்பதற்குமான சந்தர்ப்பம் வழங்கப் படும். இப்போட்டியும் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் மாத்திரமே நடத்தப்படும். போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டிகள் யாவும் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

| ஆண்டு | திகதி | நேரம் |
| --- | --- | --- |
| 10, 11 கட்டுரை | 11.06.2004 | காலை 10.00-11.00வரை |
| 12, 13 கட்டுரை | 11.06.2004 | காலை 10.00-11.30 வரை |
| 10, 11 சித்திரம் | 11.06.2004 | காலை10.00-12.00 வரை |
| 12, 13 சித்திரம் | 11.06.2004 | காலை10.00-12.00 வரை |
| வினாவிடைப்போட்டி | 12.06.2004 | காலை 10.00 முதல் |
| 10, 11 பேச்சு | 12.06.2004 | காலை 10.00 மணி |
| 12, 13 பேச்சு | 12.06.2004 | காலை 10.00 மணி |

* சித்திரப்போட்டிக்கான பென்சில், றேசர், கலர் மாணவர்கள் கொண்டுவரவேண்டும். விரும்பிய கலர்கள் பாவிக்கலாம்.

*போட்டிகள் யாவும் - கூட்டுறவாளர் 'வீரசிங்கம் மண்டபத்தில்' மேற்குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி நடைபெறும்.

* விணணப்பங்கள் யாவும்,

**செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டிடத்தொகுத
2ம் மாடி, இல: 12,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு **09.06.2004** க்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

**செயலாளர்,
கூட்டுறவு சபை.**

## மாவட்ட மகளிர் குழு தெரிவு

யாழ்.மாவட்ட கூட்டுறவுசபையின் மாவட்ட மகளிர் குழுவின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் மகளிர் குழுத் தலைவியாக திருமதி ரதி சோதிலிங்கம் மீண்டும் தெரிவு செய்யப் பட்டுள்ளார். உபதலைவியாக திருமதி பத்மலோஜினி சந்திரபாலன், உறுப்பினர்களாக செல்விகள் இ.சற்சொரூபவதி, கு.தாமரைக் குமாரி,ம.நளாயினி, திருமதிகள இ.இராசமணி, ச.ராகினி, பா.மகேஸ்வரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல.12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் 2ஆம் மாடியில் இயங்கும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையினால் 2004ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்டது.